# ஆகஸ்ட்– 19 – பொதுக்கால 20ம் ஞாயிறு

**“எனதுசதையை உண்டு இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” (யோவான்6:56)**

## முதல் வாசகம் : நீதிமொழிகள்9 : 1 – 6

ஞானம் தனக்கு ஒரு வீட்டைக் கட்டியிருக்கின்றது. அதற்கென ஏழு தூண்களைச் செதுக்கியிருக்கின்றது. அது தன் பலிவிலங்குகளைக் கொன்று, திராட்சை இரசத்தில் இன்சுவை சேர்த்து, விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது. தன் தோழிகளை அனுப்பிவைத்தது நகரின் உயரமான இடங்களில் நின்று,”அறியாப் பிள்ளைகளே, இங்கே வாருங்கள்” என்று அறிவிக்கச் செய்தது மதிகேடருக்கு அழைப்பு விடுத்தது. ”வாருங்கள், நான் தரும் உணவை உண்ணுங்கள் நான் கலந்துவைத்துள்ள திராட்சை இரசத்தைப் பருகுங்கள். பேதைமையை விட்டுவிடுங்கள் அப்பொழுது வாழ்வீர்கள் உணர்வை அடையும் வழியில் செல்லுங்கள்” என்றது.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துனை இனியவர் என்று
சுவைத்துப் பாரங்கள்.

## இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 5 : 15 – 20

சகோதர சகோதரிகளே உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள்.இந்த நாள்கள் பொல்லாதவை. ஆகவே காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள். ஆகவே அறிவிலிகளாய் இராமல், ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்து கொள்ளுங்கள்.திராட்சை மது அருந்திக் குடிவெறிக்கு ஆளாகாதீர்கள். இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும். மாறாக, தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுங்கள்.உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்ப்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம்பெறட்டும். உளமார இசை பாடி ஆண்டவரைப் போற்றுங்கள்.நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்

## நற்செய்தி : யோவான் 6: 51 – 58

அக்காலத்தில் இயேசு மக்கள்கூட்டத்தினை நோக்கி : ”விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்.””நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படிக்கொடுக்க இயலும்?” என்ற வாக்குவாதம் அவர்களிடையே எழுந்தது.இயேசு அவர்களிடம், ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்.எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்.எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம்.எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்.வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர்.உண்பவரை என்றும் வாழச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே. இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்.” என்றார்.

**தியானம்:** மனிதர்கள் நிலைவாழ் பெற இறைமகன் இயேசு அளிக்கும் இன்னொரு கொடை அவரது சதையும், இரத்தமும். “எனது சதையை உண்டு இரத்தத்தை குடிப்பவன் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார்” என்கிறார் இயேசு. நாம் நிலைவாழ்வைப்பெற இயேசு வழங்கும் உன்னதமான கொடையிது. நமது ஆன்மீக வாழ்வுக்கு வழித்துணையாக, வலிமைதரும் ஒன்றாக வரும் இந்த உணவு நம்மிலே நம்பிக்கையை வளரச் செய்கிறது. தீமைகளை தவிர்த்து நல்வழியில் நாளும் நம்மை நடத்துகிறது. இறைமகன் கிறிஸ்துவின் உடனிருப்பை எல்லாச் சூழ்நிலைகளிலும் நமக்கு தருகிறது. “உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்” எனக் கூறிய ஆண்டவர் இந்த உணவின் வழியாக நம்மில் உறைகின்ற ஆண்டவரின் பிரசன்னம் நம்மோடு இருக்கும்போது எதற்கும் நாம் அஞ்சத் தேவையில்லை. நம்மை எப்போதும் ஆண்டவரின் பிரசன்னத்தில் வைத்திருக்க, அவர் வழிகாட்டலில் நாம் வாழ இந்த உணவு உதவுகிறது. ஆண்டவரின் பிரசன்னதில் நாம் வாழும் பொழுது, அவருக்கு உரியவர்களாக வாழ்வோம். அவரிடமிருந்து கற்றுக்கொண்டு அவரைப்போல் நாம் செயல்படுவோம். நிலைவாழ்வு எமதுஉரிமைச் சொத்தாகட்டும்.